தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1984, மார்ச் 7, புதன்கிழமை.

மாசி 24, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' ஒல்லும்வாயெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல் ''

எளிதாகச் செய்து முடிக்கக் கூடிய இடங்களில் எல்லாம் வினையைச் செய்து முடித்தல் நல்லதாகும். இயலாதபோது முடிக்கும் வழிகளை ஆராய்ந்து அதனைச் செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Charges levelled against the former Principal, Regional Engineering College, Tiruchirappalli.

195. * *Q*.—No. 16868.—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the findings on each of the charges levelled against the former Principal, Regional Engineering College, Tiruchi ;

(*b*) the action taken on prima facie charges found ; and

(*c*) the mode of enquiry adopted regarding the enquiry into the charges ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ) மற்றும் (இ) அறிக்கை ஒன்று **சட்டமன்றப் பேரவையின் முன் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

**724-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1984 மார்ச் 7

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கல்லூரி முதல்வர் மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டு சம்பந்தமாக இந்த விவர அறிக்கையில் இறுதியாக இந்த கல்லூரியை விட்டு அவர் சென்று விட்டதால் மேற்கொண்டு நடவடிக்கை தேவையில்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படியானால் கல்லூரியை விட்டு சென்றுவிட்ட காரணத்திற் காக மட்டும் தான் அவர் மீது நடவடிக்கை எடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா? அல்லது வேண்டுமென்றே இது செய்யப் பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் படவில்லை, ஆதாரம் இல்லை என்ற அடிப்படையில் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. அவரும் வெளியே போய்விட்ட காரணத் தால் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் தேவையில்லை என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டு இருக்கிறது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி முதல்வர் பற்றி இந்த மன்றத்திலேயே பல விவரங் கள் சென்ற காலத்தில் சொன்னது உண்டு. அமைச்சர் அவர் களுக்கு அந்த விஷயங்கள் தெரியும். அப்படிப்பட்டவர் மீது அந்தக் குற்றச்சாட்டுகள் மீது விசாரணை செய்து நிரூபிக்கப்படவில்லை என்று இப்போது நமக்கு பதில் வந்துள்ளது. ஆனால் அவர் அந்தக் கல்லூரியை விட்டு சென்றுவிட்டார்கள் என்று சொல்லி யிருக்கிறார்கள். அப்படியானால் அவர் அரசாங்கத்தின் சர்விஸில் இன்றைக்கும் இருக்கிறாரா? வேறு எந்த இடத்திற்கு சென்றாலும் இது மாதிரி இருக்கக்கூடிய குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட வில்லை என்ற காரணத்தினால் அவர் குற்றம் அற்றவர் என்பது தான் இன்றைக்கு அரசாங்கத்தின் நிலையா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் இப்போது பாரதிதாசன் பல் கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் இல்லை, ஆகவே தேவையில்லை என்ற நிலை இருக்கிறது என்றும் அவர்கள் அங்கே இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தவறு செய்தால் நாம் நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்று சொல்லவில்லை. இப்போது இருக்கிற இடத்தில் ஏதாவது தவறு செய்து புகார் வந்து அது நிரூபிக்கப்படுமானால் நாம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS